# அர:ஃபாத்தில் ஓதவேண்டிய துஆ

அரஃபா நாளின் சிறப்பு மகத்தானது. நபிமொழிகளில் கூறப்பட்டுள்ளது:

அரஃபா நாளில் அல்லாஹ் தஆலா மனிதர்களை நரகத்தின் நெருப்பிலி ருந்து விடுதலை அளிக்கும் அளவிற்கு வேறு எந்த நாளிலும் மன்னித்து விடுதலை செய்வதில்லை. அல்லாஹ் தஆலா அன்று நெருங்கி வந்து, தன் னுடைய பிரகாசத்தை வெளிப்படுத்தி, வானவர்களுக்கு முன்னால் ஹாஜி களைப்பற்றிப் பெருமை கொள்கிறான் மற்றும் கூறுகின்றான், இவர்கள் என்ன விரும்புகிறார்கள்? (முஸ்லிம்)

அரஃபாத் மைதானம் துஆக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இடமாக உள்ளது. நபிமொழியில் கூறப்பட்டுள்ளது:

خَيْرُ الدُّعَاءِ دُعَاءُ يَوْمِ عَرَفَةَ

*பொருள்: துஆக்களில் மிகவும் சிறந்தது அரஃபாத் நாளில் கேட்கப்படும் துஆ ஆகும் (திர்மிதி)*

இறைத்தூதர் ﷺ அவர்கள் ஸ்ஜுஹர் தொழுகை முடித்த பிறகு முதற் கொண்டு மங்க்ரிப் வரையிலும் தொடர்ந்து தஸ்பீஹ், தக்பீர், தஹ்லீல் மற்றும் துஆ கேட்டவாறு இருந்தார்கள் (முஸ்லிம்).

ஆகவே, ஹாஜிகள் அந்தப் புனிதமான நாளில், புனித இடமான அரஃபாத் தில் தூய மனதுடனும் இறையச்சத்துடனும் மிக அதிகமாகவே துஆ கேட்க வேண்டும், திருமறை ஓதுவது, தஸ்பீஹ் (சுப்ஹானல்லாஹ் என்று கூறியும் துதித்தும்), தக்பீர் (அல்லாஹு அக்பர் என்று இறைவனை மகிமைபடுத்தி யும்), தஹ்லீல் (லாஇலாஹ இல்லல்லாஹ் என்று கூறி தவ்ஹீதை நிலை நாட்டியும்) துஆ கேட்பதிலும், லப்பைக் கூறியவாறு தனக்காகவும் தன்னு டைய உற்றார் உறவினர்களுக்காகவும் துஆ கேட்கவேண்டும், ஏனெனில், நபிமொழியில் கூறப்பட்டுள்ளது:

ஹாஜிகள் அந்நாளில் மன்னிக்கப்படுகிறார்கள், அவர்கள் யாருக்காக துஆ கேட்கின்றார்களோ அவர்களும் மன்னிக்கப்படுகிறார்கள் (முஸ்தத்ரக் ஹாகிம்).

அரஃபாத் நாளன்று இறைத்தூதர் ﷺ அவர்கள் இந்தத் துஆவை மிக அதிகமாகவே ஓதிக்கொண்டிருந்தார்கள்:

www.uzairfalahi.com

**لاَ إِلٰهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ، لَهُ المُلْكُ وَلَهُ الحَمْدُ، وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيرٌ**

பொருள்: *அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணையில்லை, ஆட்சியதிகாரம் அவனுக்கே உரியது, புகழ் அனைத்தும் அவனுக்கே, அவன் எல்லாவற்றின் மீதும் வல்லமையும் ஆற்றல் மிக்கவனாகவும் உள்ளான்.*

* * *

www.uzairfalahi.com